## அத்தியாயம் 12

ஒரு நிமிடம் அசையாது அவனது இதயத்துடிப்பை கேட்டவள் தான் நின்று கொண்டிருக்கும் நிலையை அப்போது தான் உணர்ந்தாள். அவனை அணைத்து இருந்த கரங்களை விலக்கியவள் மானசீகமாக தன் தலையில் கொட்டிக் கொண்டாள்.

'என்ன பண்ணி வச்சிருக்க கீத்து! இப்போ இவன் முகத்த நீ எப்பிடி பாப்ப?? சும்மாவே இந்த லொடலொடா ஓவரா பேசுவான். இன்னிகு நீ ஹக் வேற பண்ணிட்ட. கேக்கவே வேணாம் போ!' என்று அவள் மனசாட்சி அவளை கேலி செய்ய சிவந்த முகத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவனும் அவளையே பார்த்து கொண்டிருக்கவும் அவள் கன்னம் வெட்கத்தில் சிவந்ததை அவளால் உணர முடிந்தது. பின் தன்னை சமனப்படுத்தி கொண்டவள் அவனை நேராக பார்த்து "ஹலோ! இது ஜஸ்ட் ஒரு ஃப்ரெண்ட்லி ஹக் தான். டோண்ட் டேக் இட் ராங்...ஓகே□" என்று வரவழைத்து கொண்ட தைரியத்துடன் கூறினாள்.

அவளை பார்த்து புன்னகைத்தவன் " ஓகே மேம்!! அப்போ நான் அந்த சரண்யா கூட பேசுனா உங்களுக்கு எந்த பிராப்ளமும் இல்ல! அப்பிடி தான" என்று கண்ணில் குறும்புடன் கேட்க இரு கைகளையும் அவன் கழுத்தை நெறிப்பது போல் கொண்டு சென்றவள் " நீ அவ கூட பேசிடுவ?? நீ பேசி தான் பாரேன்!" என்று அவனை முறைத்தாள்.

" சரண்யா!' என்று அவளை நோக்கி கை காட்ட கடுப்பானவள் அவன் ஷேர்ட் காலரை பிடித்தாள்.

" அந்த ஆண்ட்டி கூட நீ பேசுனனு வை! அப்றம் அவ்ளோ தான்!" என்று கண்ணை உருட்டியவளை பார்த்து அவன் சிரித்து கொண்டே அவள் முகத்தில் விழுந்த முடிகற்றையை மெதுவாக அவள் காதின் பின்புறம் ஒதுக்கியவன் " சரி பேசல! பட் அதுக்கு பதிலா இன்னிக்கு ஃபுல் டே நீ என் கூட ஸ்பெண்ட் பண்ணனும்! ஓகேவா??" என்று கண்ணில் காதலுடன் கேட்டவனை பார்த்து சிரித்தபடியே தலையாட்டினாள் கீதா.

அவள் கையை தன் கையுடன் கோர்த்து கொண்டவன் புன்னகையுடன் ஹாலுக்கு வந்து அவனும் அமர்ந்து அவளையும் பக்கத்திலேயே அமர்த்திக்

கொண்டான். பிடித்த கையை அவனும் விடவில்லை., அவளும் விலக்கவில்லை!

அவர்களை ஆச்சரியத்துடன் பார்த்தபடியே மற்றவர்களும் அமர அரட்டை கச்சேரி ஆரம்பமானது.

" தாய்க்கிழவி! என்ன லவ்வா?" என்று கேட்டுக் கொண்டே கண் அடித்தான் ஜேஸி.

" வெறும் லவ் இல்ல போல.. இது ஒரு வித்தியாசமான காதல் கதை" என்ற அனுவை பொய்க்கோபத்துடன் பார்த்தான் வருண்.

" ஐய்யய்யோ! ஃபர்ஸ்ட் டைம் அண்ணிய சாரில பாத்ததும் அதை பத்தி பேசியே எங்க காதை புண்ணாக்குனதுலாம் அவன் கண் முன்னாடி வந்து போகுமா இல்லையா?" என்று பிரியா வருணின் காலை வாற கீதா அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

அவள் பார்வையிலேயே அவள் கேட்க வந்ததை புரிந்து கொண்டவன் " எனக்கு நீ எப்போவுமே ஷ்பெஷல் தான் கீத்து!" என்று அவளை தோளுடன் அணைத்தவனை பார்த்து அனைவரும் "ஓஹோ" என்று கூச்சலிட கீதா அவன் கையை விலக்கி விட்டாள்.

ஸ்ரீதேவி கீதாவை அணைத்து "சும்மா இருங்கப்பா! என்னோட அக்காவ ஓவரா கலாய்க்காதிங்க" என்று சொல்ல எல்லாரும் சிரித்தனர். இதை பார்த்து சரண்யாவுக்கு பற்றி கொண்டு வந்தது.

இந்த வருணுக்கு கண்ணே இல்ல போல! போயும் போயும் இந்த கீதா கிட்ட அப்பிடி என்ன இருக்குனு இப்பிடி விழுந்து கெடக்கிறான்! என்று மனதிலேயே பொருமியபடியே கீதாவை பார்த்தவள் "கீத்துக்கு ஃபைனலி லவ் செட் ஆயிடுச்சு போல! பட் எனக்கு ஒரு டவுட்! வருண் நீங்க அப்ராட்ல இருந்திருக்கிங்க! அங்க ரொம்ப அழகான கேர்ள்ஸ பாத்துருப்பிங்க! அப்றம் எப்பிடி கீதாவ லவ் பண்ணிங்க?" என்று வாய் விட்டே கேட்டுவிட்டாள்.

ரியாவுக்கும் யோகாவுக்கும் இவளை என்ன தான் பண்றதுனு கடுப்பில் கையை கட்டி கொண்டு வருணின் பதிலுக்கு காத்திருந்தனர். அவர்கள் மட்டுமின்றி நண்பர் குழு முழுவதும் அவனது பதிலுக்கு காத்திருக்க அவனோ கீதாவை பார்த்து சிரித்தவன் அவளை காதலுடன் பார்த்து " என்னோட கீத்து

மாதிரி அங்க யாரயும் நான் பாக்கலயே!" என்று சொல்ல சரண்யா புரியாமல் பார்க்க அவன் தொடர்ந்து கீதாவை பார்த்த படியே அந்த தருணத்தை விளக்க ஆரம்பித்தான்.

" என் கீத்து அழகுக்கு ஈக்வலா இந்த உலகத்துலயே யாரும் கெடயாது. அவளோட சிம்ப்ளிசிட்டி தான் அவளோட அழகு. ஒன் மோர் திங் ஒரு லை஀ப் பார்ட்னர் அழகா மட்டும் இருந்தா போதும்னு நெனைக்கிறவன் இல்ல நான். எனக்கு நெறையா மைனஸ் பாயிண்ட்ஸ் இருக்கு. அதயும் தாண்டி என்ன எனக்காகவே ஏத்துக்கிட்ட ஒருத்தி கீத்து மட்டும் தான். என் ஃபேமிலிய காரணம் காட்டி தான் என்னோட ஃப்ரெண்ட்ஷிப்பையே அவ ஏத்துகிட்டா. அதே ஃபேமிலியால தான் என் மேல இருந்த கோவத்த கூட விட்டுட்டு எனக்கு இன்னொரு சான்ஸ் குடுத்தா. இப்பிடி ஒருத்திய மிஸ் பண்ண நான் என்ன பைத்தியமா?"

வருண் பேசி முடித்ததும் ஜேசி " ஓ மை காட்! ப்ரோ வாட் அ டிவைன் லவ்" என்று சிலாகித்தபடியே அவனை கட்டி அணைத்து கொண்டான்.

அவினாஷும் விக்னேஷும் சரண்யாவை பார்த்து கேலியாக சிரிக்க அவளும் சிரித்து சமாளித்து வைத்தாள்.

இவ்வாறு பேசியபடியே லஞ்ச் சாப்பிட அமர்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் கேலி செய்து கொண்டே சாப்பிட்டு முடித்தனர்.

வருணை பார்த்த படியே சாப்பிட்டு முடித்த கீதா பாத்திரங்களை சுத்தம் செய்ய தொடங்கினாள். அவளுடன் இணைந்து வேலையை பகிர்ந்து செய்ய தொடங்கினான்.

வேலை செய்தபடியே கீதா வருணிடம் பேச்சு கொடுக்க தொடங்கினாள்.

" வருண்! உனக்கு என்ன இவ்ளோ பிடிக்கும்னு ஏன் முதல்லயே என் கிட்ட சொல்லல?"

" பிகாஸ் எங்க நீ தப்பா நெனச்சு என் கூட பேசாமயே போய்டுவியோனு நான் கொஞ்சம் பயந்துட்டேன்"

" அஹான்! பட் இந்த விஷயத்தை எப்போவோ அவி கேட்ச் பண்ணிட்டான். எனக்கு தான் புரியாமலே போய்ட்டு போ"

" நீ சரியான டியூப் லைட்□!"

" ஹலோ போதும் பா! கொஞ்சம் அப்பாவியா இருந்துட்டேன்"

" ஓகே! ஜோக்ஸ் அப்பார்ட்., உனக்கு என் மேல இருந்த கோவம் போயிடுச்சா இல்லயா??"

" போய்டுச்சு! பட் இன்னும் என்னோட குழப்பம் தீரல."

" என்னடி குழப்பம் உனக்கு? டோண்ட் வொர்ரி., உன் குழப்பத்த நீ வளத்து பேர் வச்சு பெரிய பையனாக்கிக்கோ!" என்று சலித்தபடி சொல்லிவிட்டு பாத்திரத்தை அடுக்க தொடங்கினான்.

அவன் கூறியதை கேட்டு சிரித்தாள் கீதா.

" கீத்து! உங்க யாருக்கும் அந்த சரண்யாவ பிடிக்கல. தென் ஒய் டிட் யூ இன்வைட் ஹெர்??"

" எல்லாம் அஜிக்காக தான். அஜிக்கு இவள ரொம்ப பிடிக்கும். ரொம்ப லவ் பண்றான். பட் ஷீ டஸிண்ட் டிஸர்வ் ஹிஸ் லவ்"

" எனிதிங் ராங் அபவுட் ஹெர்??"

" அவளுக்கு ஸ்டெடி மைண்ட் கெடயாது. நீ கூட பாத்த தான, அஜி கூட தான் அவ இங்க வந்தா! பட் அவன் போனதும் அவ கண் உன் மேல விழ ஆரம்பிச்சது. அப்புறமா அஸ் யுஸ்வல் அவ உன் கூட கடலை போட ஆரம்பிச்சிட்டா. இது தான் அவ. ஷீ வாஸ் டிரையிங் டு செப்பரேட் அவி அண்ட் ரியா டூ. ஏதோ அவி கொஞ்சம் லவ்ல ஸ்ட்ராங்கா இருந்தான். இல்லனா அவங்களுக்கு இவளால பிரேக் அப் ஆயிருக்கும்" என்று அவள் கூறியதை கேட்டவன் அந்த சரண்யாவிடம் இனி கொஞ்சம் தள்ளியே இருக்க வேண்டுமென்று மனதில் நினைத்து கொண்டான்.

இருவரும் நண்பர்கள் குழுவுடன் சேர்ந்து அரட்டையடிக்க ஆரம்பித்தனர்.

" தாய்க்கிழவி! எனக்கு ஒரு டவுட்" என்று கீதாவிடம் கேட்டான் ஜேசி.

" என்னடா டவுட்??"

" உன்னயும் ஒரு பொண்ணா மதிச்சி வருண் ப்ரோ லவ் பண்றாரு. நீ என்ன அவர கண்டுக்கவே மாட்ற மாம்?"

" டேய்! அவனே சும்மா இருக்கான். உனக்கு என்னடா?"

" அதுலாம் தெரியாது. நீ இன்னிக்கு அவருக்கு தெளிவா ஒரு பதில சொல்லு"

" இது என்ன விளையாட்டா உனக்கு ஜேசி?? எனக்கு யோசிக்க டைம் வேணும்னு நான் வருண் கிட்ட கேட்டிருக்கேன்."

" நீ யோசிச்சு முடிக்கிறதுக்கு முன்னாடி பாட்டியம்மா ஆய்டுவ தாய்க்கிழவி"

"என்ன ஒலறிட்டு இருக்க ஸன்??"

" மாம் ஐ ஹேவ் ஃபாலன் இன் லவ்" என்று கண்ணை மூடி ரசித்து கூறினான் ஜேசி.

" வாட்?" என்று அதிர்ந்தாள் கீதா. "யாருடா அது??? என் கிட்ட ஏன் சொல்லல எரும?? இனிமே என் கூட பேசாத போ!" என்று அவள் படபடக்கவும் அவளை முறைத்தான் ஜேஸி.

" உன்னோட தொங்கச்சி தான் அது" என்று அவன் சாதாரணமாக கூறியதை கேட்டு அனைவருமே அதிர்ச்சியுடன் ஸ்ரீதேவியை பார்க்க அவள் வெட்கத்துடன் தலையை குனிந்தாள்.

" என்னது? ஸ்ரீகுட்டியா? நீயுமா என் கிட்ட மறச்சிட்ட??" என்று கீதா கேட்கவும் பேச வந்த ஸ்ரீயை அமைதிபடுத்திய ஜேஸி "மாம்! உன் கிட்ட மறைக்கணும்னு நாங்க நெனைக்கல. பட் சொல்லுறதுக்கு இப்போ தான் டைம் வந்துச்சு" என்றான்.

" சரி பொலச்சு போங்க. பட் ஒன் கண்டிஷன்" என்று கீதா கூறவும் என்னவென்று பார்த்தான் ஜேஸி.

" உன்னோட மேரேஜுக்கு எனக்கு 50000க்கு சாரி எடுத்து குடுக்கணும். அப்போ தான் நான் அட்டெண்ட் பண்ணுவேன்" என்று கெத்தாக கூற அவளை தோளுடன் அணைத்து கொண்டவன் "உனக்கு இல்லாததா மாம்?? பிராமிஸ்" என்று சொல்லி மற்றொரு கையால் ஸ்ரீதேவியை அணைத்து கொண்டான்.

" ஐயோ இந்த ஃபேமிலி டிராமா தாங்க முடியலபா" என்று யோகாவும் ரியாவும் கிண்டலடிக்க அனைவரும் அதை கேட்டு நகைத்தனர்.

அன்றைய நாள் அவர்கள் வாழ்க்கையில் ஒரு அழகான நாளாக ஆரம்பித்து இனிமையான நினைவுகளோடு முடிந்தது.